# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 47/ 2021** **நாள்: 11.10.2021**

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் உச்சநீதிமன்ற ஆணையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று 11.10.2021 பிற்பகல் நடைபெற்றது.**

உச்சநீதிமன்ற ஆணையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கு தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் இன்று (11.10.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களின் பணிக்காலியிடங்களை பூர்த்தி செய்தல், வார்டு மறுவரையறை குறித்த பணிகள், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வாக்குச்சாவடிகள் கண்டறிதல், வாக்குப்பதிவு இயந்திரங்களின் இருப்பு, கோவிட் - 19 வழிகாட்டு நெறிமுறைகளின்படி வாக்குச் சாவடிகளுக்கான பொருட்கள் வாங்குதல் மற்றும் தொடர்புடைய இனங்கள் விவாதிக்கப்பட்டன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தேர்தல் நடத்திட ஏதுவாக அனைத்து தேவையான முன் நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொண்டிட தொடர்புடைய மாநில தேர்தல் அலுவலர்களையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மேலும், மேற்கண்ட பணிகளை விரைந்து முடித்திட தக்க அறிவுரைகளை தொடர்புடைய அலுவலர்களுக்கு வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. பா.பொன்னையா இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு மண்டல துணை ஆணையர் திரு. சிம்ரன்ஜீத்சிங் காலோன், இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு.தனலட்சுமி, மற்றும் ஆணையத்தின் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

11/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்